முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.1.2026) திருச்சிராப்பள்ளியில், தமிழர் தேசம் கட்சி நிறுவனத் தலைவர் கே.கே. செல்வகுமார் அவர்கள் அண்மையில் திருச்சியில் நடைபெற்ற தமிழர் தேசம் கட்சி மாநாட்டையொட்டி சந்தித்து பேசினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உள்ளனர்.

விமான விபத்து:

மகாராஷ்டிர மாநில துணை முதலமைச்சர் அஜித் பவார் உயிரிழப்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 30 -

மகாராஷ்டிர மாநிலத் துணை முதலமைச்சர் அஜித் பவார் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மகாராஷ்டிர மாநிலத் துணை முதலமைச்சர் அஜித் பவார் அவர்களும், அவருடன் பயணித்தவர்களும் விமான விபத்தில் உயிரிழந்த துயரச் செய்தி அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

மிகப் பெரும் துன்ப நிகழ்வான இதனை ஏற்றுக் கொள்ள நெஞ்சம் மறுக்கிறது.

திரு. சரத் பவார், திருமதி சுப்ரியா சுலே உள்ளிட்டவர்களுக்கும், இக்கொடும் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தாராபுரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில்

ரூ.27.00 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப்பணிகள்!

அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் நேரில் ஆய்வு!

திருப்பூர், ஜன.30-

மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் 28.01.2026 புதன்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நஞ்சியம்பாளையத்தில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் மற்றும் தாராபுரம் அரசு மருத்துவமனையில் பொதுப் பணித்துறையின் சார்பில் ரூ.24.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டடப் பணிகள் என மொத்தம் ரூ27.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவித்ததாவது :தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டப்பணிகள் முழுமையாக பொதுமக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு ஆய்வுப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தாராபுரம் அரசு மருத்துவ மனையில் பொதுப்பணித் துறையின் சார்பில் ரூ.24.00 கோடி மதிப்பீட்டில் 62,268 ச.அடி பரப்பளவில் ஆறு தளங்களுடன் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

இதில் தரைதளம் 9,312 ச.அடி பரப்பளவில் வரவேற்பறை, கதிரியக்க அறை, சி.டீ ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் அறை ஆய்வகம் 2 எண்ணிக்கை, அல்ட்ரா கதிர்வீச்சு அறை, வெளிப்புற நோயாளிகளுக்கான இருதய சிகிச்சை அறை மற்றும் மருந்தக இருப்பு அறைகளுடனும்,

முதல் தளம் 8,826 ச.அடி பரப்பளவில் டயாலிசிஸ் வார்டு, பணி மருத்துவர் அறை, பணி செவிலியர் அறை, தீவிர சிகிச்சை பிரிவு பதிவறை, மருந்து இருப்பு அறை, சாய்தளம் மற்றும் கழிவறை வசதிகளுடனும்,

இரண்டாம் தளம் 8,826 ச.அடியில் அறுவை அரங்கு 2 எண்கள், நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கு தயார் படுத்தும் அறை, பணி மருத்துவர்அறை, பணி செவிலியர் அறை ,கழிவறை மற்றும் சாய்தள வசதிகளுடனும்,

மூன்றாம் தளம் 8,826 ச.அடி பரப்பளவில் பெண்களுக்கான மருத்துவசிகிச்சை பிரிவு மற்றும் அறுவைசிகிச்சை பிரிவு (எலும்பு பிரிவு), ஆண்களுக்கான அறுவை சிகிச்சை வார்டு, மருத்துவ சிகிச்சை பிரிவு, பணி மருத்துவர் அறை, பணி செவிலியர் அறைகளுடனும்,

நான்காம் தளம் 8,826 ச.அடியில் ஆண்களுக்கான மருத்துவ சிகிச்சை பிரிவு மற்றும் அறுவை சிகிச்சை பிரிவு (எலும்பு பிரிவு) பெண்களுக்கான மருத்துவ சிகிச்சை பிரிவு, பணி மருத்துவர் அறை, பணி செவிலியர் அறை, சாய்தளம் கழிவறை வசதிகளுடனும்,

ஐந்தாம் தளம் 8,826 ச.அடி பரப்பளவில் குழந்தைகளுக்கான பிரிவு காப்பீடு திட்ட பிரிவு, (ஆண்கள் மற்றும் பெண்கள்) பணி மருத்துவர் அறை, பணி செவிலியர் அறை, சாய்தளம் கழிவறை வசதிகளுடனும்,

ஆறாம் தளம் 8,826 ச.அடி பரப்பளவில் கண் சிகிச்சை பிரிவு, (ஆண்கள் மற்றும் பெண்கள்) இரத்த வங்கி, கூட்ட அரங்கம், சாய்தளம் கழிவறை வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது. மேலும், சமந்தப்பட்ட அலுவலர்களிடம் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது என்று அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நஞ்சியம் பாளையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்டு ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.எஸ். மீரா, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, தாராபுரம் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி. செந்தில்குமார், நகர கழக செயலாளர், பொறியாளர் எஸ்.முருகானந்தம், தாராபுரம் நகர்மன்றத் தலைவர், பொறியாளர் கு.பாப்புக் கண்ணன், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார், உதவி செயற் பொறியாளர்கள் (பொதுப் பணித்துறை) கனகராஜ், பிரியா, உதவி பொறியாளர்கள் அமரமூர்த்தி, சர்மிளா, தாராபுரம் வட்டாட்சியர் இராமலிங்கம் உள்பட கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்ற மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாமில் மீனவர் நலவாரியத் தலைவரும் கழக மீனவர் அணி செயலாளருமான அ.ஜோசப் ஸ்டாலின் உறுப்பினர் அட்டைகளை வழங்கினார்

சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் வாழப்பாடியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன் அப்பாதுரை வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்.பி , வி.பி. ராஜன், குடியாத்தம் பாரி, மருத்துவர் திவ்யா ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் சுரேஷ்குமார், சின்னதுரை , கருணாநிதி, டாக்டர் தருண், ஏ.ஏ.ஆறுமுகம், மனோகரன், தமிழ்செல்வன், சந்திரமோகன், சங்கர், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள்,கழக முன்னோடிகள், திரளாக கலந்து கொண்டனர். கூட்டம் முடிவில் மகேஸ்வரன் நன்றியுரையாற்றினார்.

மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார் விமான விபத்தில் உயிரிழப்பு!

அஜித் பவாருடன் விமானத்தில் பயணித்த 6 பேரும் உயிரிழந்தனர்!

மும்பை, ஜன. 30-

மகாராஷ்டிர மாநிலம் பாராமதியில் நடைபெறவுள்ள கட்சி கூட்டத்தில் பங்கேற்பதற்காக அம்மா நில துணை முதலமைச்சர் அஜித்பவார் சிறிய ரக விமானத்தில் நேற்று முன்தினம் காலை புறப்பட்டார். பாராமதியில் காலை 8:45 மணிக்கு விமானம் தரையிறங்க முயன்றபோது

விமானம் விபத்தில் சிக்கி தீப்பற்றி எரிந்தது. விமான விபத்தில் சிக்கிய அஜித் பவார், படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த விபத்தில் அஜித் பவாருடன் பயணித்த 6 பேரும் உயிரிழந்தனர். தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமானம் விபத்தில் சிக்கியதாக முதற்கட்ட விசாரணையில் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த விபத்து குறித்து உயர்மட்ட விசாரணைக்கு சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில்

மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாம்கள்!

மீனவர் நலவாரியத் தலைவர் அ. ஜோசப் ஸ்டாலின் சிறப்புரை!

மயிலாடுதுறை, ஜன. 30 -

மீனவர் நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கையைத் தீவிரப்படுத்த கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்புமுகாம்கள் நடைபெற்றுவருகிறது.

அந்தவகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில், தரங்கம்பாடி, பூம்புகார், திருமுல்லைவாசல், பழையார் ஆகிய நான்கு இடங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்றது. மயிலாடுதுறை மாவட்டத்தில் மீனவர் நலவாரியத்தில் ஏற்கனவே 27306 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த முகாம்களின் வழியே முகாம் தொடங்கிய முதல் நாளிலேயே 1002 பேர் உறுப்பினர் சேர்க்கைக்கு விண்ணப்பம் அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் பேசுகையில், "நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீனவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் கழக ஆட்சியில் மயிலாடுதுறை மாவட்டத்தில் மட்டும் 320 பயனாளிகளுக்கு, 5 லட்சத்து 92,500 ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் இங்கு 5 பயனாளிகளுக்கு, 21 ஆயிரம் ரூபாய் திருமண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

நலவாரியத்தில் உறுப்பினராக இருந்து மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் இயற்கை மரணம் அடைந்த 265 பயனாளிகளுக்கு 20 லட்சத்து 87,000 ரூபாய் இயற்கை மரண நிவாரணத் தொகையாக அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது. நலவாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களில் கடந்த 5 ஆண்டுகளில், விபத்தால் மரணமோ, மாற்றுத்திறனாளிகளாகவோ ஆன 34 பயனாளிகளுக்கு, 67 லட்சம் ரூபாய் விபத்து மரணம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் மீன்பிடித் தொழிலின் போது விபத்தில் மரணமடைந்த 3 பயனாளிகளுக்கு 6 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினர் ஆனவர்கள் இயற்கை மரணம் அடைந்தால் அவரது ஈமச்சடங்கிற்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, கடந்த 5 ஆண்டுகளில் மயிலாடுதுறை மாவட்டத்தில் மரணித்த 272 பயனாளிகளுக்கு 6 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஈமச்சடங்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கழக ஆட்சியில் மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை 5000 ரூபாயில் இருந்து 8000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த இரு நிதியாண்டுகளில் மட்டும் மயிலாடுதுறை மாவட்டத்தில் 32,611 மீனவக் குடும்பங்களுக்கு 2608.88 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் கழக ஆட்சியில் மீன்பிடி குறைவு கால நிவாரணத் தொகை 5000 ரூபாயில் இருந்து 6000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் 43,147 மீனவக் குடும்பங்களுக்கு 2588.82 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதுபோல் ஏராளமான மீனவர் பயன்பாட்டுத் திட்டங்களை பட்டியலிட முடியும்.

இதேபோல், கழக ஆட்சியில் மயிலாடுதுறை மாவட்டத்தில், மீனவ கிராமங்கள், துறைமுகங்களுக்கு ஏராளமான உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பழையார் மீன்பிடித் துறைமுகத்தில் 2 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் படகு பழுது பார்க்கும் சாய்வுதளம், பழையார் மீன்பிடித் துறைமுகத்தில் 1 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன் உலர்தளம், புதுக்குப்பம் மீனவக் கிராமத்தில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்பு சுவர் அமைக்கும் பணி ஆகியவை கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது. திருமுல்லைவாசல் மீனவக் கிராமத்தில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்தும் பணி 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறை வேற்றப்பட்டுள்ளது.

சந்திரபாடி மீனவக் கிராமத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்கு தளமும், வானகிரி மீனவ கிராமத்தில் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளத்தை மேம்படுத்தும் பணிகளும் கழக ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டது. குட்டியாண்டியூர் மீனவ கிராமத்தில் 6 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் மற்றும் கடலரிப்பை தடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பழையார் மீன்பிடித் துறை முகத்தை மேம்படுத்தும் பணிகள், கழக ஆட்சியில் 26 கோடியே 26 லட்சம் ரூபாய் மடிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. கொடியம்பாளையம் மீனவக் கிராமத்தில் கடற்கரையோர வசதிகள் ஏற்படுத்த 2 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் 15 மீனவ கிராமங்களில் 44 இடங்களில் 13 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயற்கைப் பவளப் பாறைகளை உருவாக்குதல் மற்றும் நிறுவுதல் திட்டம் நிறை வேற்றப்பட்டது.

இன்னும் ஏராளமான பணிகள் கழக ஆட்சியில் நடந்து வருகிறது. வானகிரி மீன்பிடி இறங்கு தளத்தினை கூடுதல் வசதிகளுடன் தெற்குப் பகுதி நேர்கல் சுவரை 360 மீட்டரிலிருந்து 420 மீட்டர் ஆகவும், வடக்குப் பகுதி நேர்கல் சுவரை 355 மீட்டரில் இருந்து 415 மீட்டராகவும் விரிவு படுத்தும் பணிகள் கழக ஆட்சியில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

இதேபோல், தரங்கம்பாடி மீன்பிடித் துறை முகத்தினை கூடுதல் வசதிகளுடன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பனி 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. சந்திரபாடி மீனவ கிராமத்தில் ஆற்றின் இருபுறமும் நேர்கல் சுவர் மற்றும் மீன் இறங்குதளம் மேம்படுத்தும் பணி ஆகியவைகள் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. புதுப்பேட்டை மீனவக் கிராமத்தில் காலநிலையை எதிர்கொள்ளும்வகையில் கடற்கரையோர வசதிகளை அமைக்கும் பணி 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதேபோல், கீழமூவர்கரை மீனவக் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணி 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடந்துவருகிறது. இப்படி ஏராளமான திட்டங்களை மயிலாடுதுறை மக்களுக்கு திராவிட மாடல் அரசு தந்துள்ளது. மீனவ மக்களுக்கு இத்தனை திட்டங்களைத் தந்திருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்நேரத்தில் நன்றி. மீனவர் நலவாரியத்தில் நீங்கள் உறுப்பினர் ஆவதுடன், இதுதொடர்பாக மற்றவர்களுக்கும் விழிப்புணர்வூட்ட வேண்டும்!"இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்வில் கழக முன்னோடிகள், மீனவர் நலவாரிய உறுப்பினர்கள், மீன்வ எத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குன்னூர் நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் வட்டார விளையாட்டுப் போட்டிகளை அரசுக் கொறடா கா. ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்.